## ஸம்ஸ்க்ருதத்திற்கு சரியான ஒரு லிபியின் அவசியம்

நமது ஸம்ப்ரதாயங்களில் ஸம்ஸ்க்ருத மொழியின் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். தமிழும் தெய்வீக மூலம் கொண்ட மொழியானாலும், தெய்வங்களைத் தமிழில் ஆசையுடன் துதித்தாலும், தொன்றுதொட்டு **அனுஷ்டானங்களை ஸம்ஸ்க்ருதத்தின் அடிப்படையில் நம் முன்னோர்கள் செய்திருக்கிறார்கள்**.

ஸம்ஸ்க்ருதத்தில், குறிப்பாக **அனுஷ்டானத்தில் ஒலி/உச்சரிப்பு மிக முக்கியம்** என்பதை நாம் அறிவோம். ஆகவே அனுஷ்டானத்திற்கான ஸங்கல்பம் ஶ்லோகங்கள் முதலியவற்றை **சரியானதொரு லிபியில்** எழுதவோ படிக்கவோ வேண்டும்.

தமிழ் மொழியை எழுதப் போதுமான வரிவடிவங்கள் தமிழ் லிபியில் உள்ளன. ஆனால் **ஸம்ஸ்க்ருதத்தில்** அதிக ஒலிகள் இருப்பதால் அதனை **எழுத அதிக வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன**. இதற்காகவே பழைய காலத்திலிருந்து க்ரந்த லிபி இருந்து வருகிறது. இக்காலத்திலோ தேவநாகரி ப்ரபலமாக உள்ளது.

தற்சமயம் **தமிழ் லிபியில்** பிற மொழி ஒலிகளைக் குறிக்க ஜ (ஶ) ஷ ஸ ஹ க்ஷ ஸ்ரீ ஆகிய (க்ரந்த) வரிவடிவங்கள் மட்டும் பயன்பாட்டில் உள்ளன. மேலும் தமிழ் **வல்லின வரிவடிவங்கள் க ச ட த ப ஐந்து மட்டுமே** உள்ளன. ஆனால் ஒவ்வொன்றுக்கும் நான்கு நான்காக **ஸம்ஸ்க்ருதத்தில் இருபது வல்லின ஒலிகள் உள்ளன**. அவ்வாறே **ரு லு போன்ற சிறப்பு உயிர் ஒலிகளையும் அனுஸ்வாரம் விஸர்க்கம் என்ற ஒலிகளையும்** குறிக்க தமிழ் லிபியில் **வரிவடிவங்கள் இல்லை**. ஆகவே தமிழ் எழுத்தை மட்டும் கொண்டு ஸம்ஸ்க்ருதத்தைச் சரியாக குறிக்க இயலாது.

குறிப்பாக வல்லின எழுத்துக்களுடன் க$_2$ க$_3$ க$_4$ என்று எண்களைப் பயன்படுத்தும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது. ஆனால் இந்த எண்களைக் கண்டுகொள்ளாமல் தமிழ் முறைப்படி படித்தால் ஒலிகள் மாறிவிடும் வாய்ப்பு அதிகம் உள்ளது. கோ$_3$பால என்பது கோ$_1$பா$_3$ல என்று ஒலிக்கும். பெரும்பாலானோர் இப்படித்தான் செய்கின்றனர்.

ஆகவே ஜ முதலியவற்றைப் போல் **மற்ற ஒலிகளுக்கும் அவைகளது க்ரந்த வரிவடிவத்தையே பயன்படுத்துவது** அர்த்தமுடையதாகிறது. இந்த தமிழ்+க்ரந்தம் கலந்த முறையிலும் நமது கோப்புகளை வெளியிட்டு வருகிறோம்.

க்ரந்தம் அல்லது தேவநாகரி என்ற முழு லிபியைக் கற்பதை விட **இந்த கலந்த முறைக்காக சில வரிவடிவங்களை மட்டும் கற்பது மிகவும் எளிதாகும்**. மனமிருந்தால் மார்க்கம் உண்டு. முடியாது என்று நினைக்கவேண்டியதில்லை.

ஆகவே **இந்த தமிழ்+க்ரந்தம் கலந்த முறையிலோ அல்லது முழு க்ரந்தம் அல்லது தேவநாகரி லிபியைப் பயன்படுத்தியோ ஸம்ஸ்க்ருதத்தை வாசிப்பதே சிறந்தது என்று வலியுறுத்துகிறோம்**. ஆகவே இயன்றவரை அந்த கோப்புகளையே பயன்படுத்தவும். இருப்பினும் பலரின் வேண்டுகோளுக்கிணங்க நடப்பு தமிழ்+234 முறையிலும் கோப்புகளை வெளியிட்டு வருகிறோம்.








ஶ்ரீ-வேத3வ்யாஸாய நம:

ஶ்ரீமத்3-ஆத்3ய-ஶங்கர-ப4க3வத்பாத3-பரம்பராக3த-
மூலாம்நாய-ஸர்வஜ்ஞ-பீட2ம்
ஶ்ரீ-காஞ்சீ-காமகோடி-பீட2ம்
ஜக3த்3கு3ரு-ஶ்ரீ-ஶங்கராசார்ய-ஸ்வாமி-ஶ்ரீமட2-
ஸம்’ஸ்தா2நம்

# ॥துலா-ஸ்நாந-விதி4:॥

துலாஸ்நானம் செய்யும் முறை

## துலா ஸ்நான சிறப்பு

☞ காவேரியின் சிறப்புகள்

துலா ஸ்நானம் என்பது துலா (ஐப்பசி) மாஸத்தில் காவேரி நதியில் ஸ்நானம் செய்வது. இவ்வாறு ஸ்நானம் செய்வது அளவற்ற புண்யத்தை அருளக்கூடியது. இந்த மாதம் முழுவதும், கங்கை உட்பட அனைத்து புண்ய தீர்த்தங்களும் காவேரி நதியில் வந்து வசிகின்றன.

அருணோதய (உதயத்திற்கு முன்பு 4 நாழிகை) நேரத்தில் துலா மாஸம் இருக்கும் தினங்களன்று துலா ஸ்நானம் செய்யப்படும். ஶாஸ்த்ரங்களில் சொல்லியபடி, துலா மாதத்தில் காவிரியில் தினமும் நீராடுவது, ஒருவருக்கு தர்ம-அர்த்த-காம-மோக்ஷங்களாகிய நான்கு புருஷார்த்தங்களையும் வழங்குகிறது. மேலும், இந்த மாதத்தில் காவேரிக் கரையில் செய்யப்படும் தான தர்மங்கள், கங்கை நதிக்கரையில் செய்வதற்கு இணையான சிறப்புப் புண்யத்தை அளிக்கின்றன.

## முடவன் முழுக்கு

ப்ரதானமான துலா ஸ்நான காலம் முடிந்த முதல் நாளும் (பெரும்பாலும் கார்த்திகை மாதத்தின் முதல் நாள்) துலா ஸ்நானத்துடன் சேர்ந்த ஒரு சிறப்பு உண்டு. இது ”முடவன் முழுக்கு” என்று அழைக்கப்படுகிறது.

இதன் கதையாவது — நாத சர்மா என்ற முடவன் (கால் இயலாதவன்) ஒருவனும், அவனது மனைவி அனவித்யாம்பிகையும், துலா ஸ்நான மஹிமையைக் கேள்வியுற்று அதனைப் பெற்றுய்ய மாயூரம் (மயிலாடுதுறை) நோக்கி வெகு தூரத்திலிருந்து ப்ரயாணித்தனர். முடம் காரணமாக துலா மாதத்தின் கடைசி நாள் முடியும் நேரத்தில் தான் மாயூரம் வந்து சேர்ந்தனர். துலா ஸ்நானம் செய்வதற்கான காலம் முடிந்துவிட்டது என்றறிந்து மிகவும் ஏமாற்றமடைந்தனர்.

அவர்கள் வருத்தப்பட்டு பகவானை வழிபட்டபோது சிவ பெருமான் அவர்கள் கனவில் தோன்றி, மறுநாள் காலையில் (கார்த்திகை மாதத்தின் முதல் நாள்) நீராடுமாறு அறிவுறுத்தி, அவர்களுக்கு மாதம் முழுவதும் துலா ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும் என்று உறுதியளித்தார். ஆகவே துலா ஸ்நானம் முழுதும் ஸ்நான செய்ய இயலாதவர்கள் முடவன் முழுக்கு அன்றாவது ஸ்நானம் செய்வது அத்தகைய பலனைத் தரும்.

ஆசமநம்। ஶுக்லாம்ப$^3$ரத$^4$ரம்’ + ஶாந்தயே। ப்ராணாயாம:।
மமோபாத்தஸமஸ்தது$^3$ரிதக்ஷயத்$^3$வாரா ஶ்ரீபரமேஶ்வரப்ரீத்யர்த$^2$ம்’

தத$^3$வ லக்$^3$நம்’ ஸுதி$^3$நம்’ ததே$^3$வ தாராப$^3$லம்’ சந்த்$^3$ரப$^3$லம்’ ததே$^3$வ|
வித்$^3$யாப$^3$லம்’ தை$^3$வப$^3$லம்’ ததே$^3$வ லக்ஷ்மீபதே: அங்க்$^4$ரியுக$^3$ம்’ ஸ்மராமி||

அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தா$^2$ம்’ க$^3$தோ(அ)பி வா|
ய: ஸ்மரேத் புண்ட$^3$ரீகாக்ஷம்’ ஸ பா$^3$ஹ்யாப்$^4$யந்தர: ஶுசி:||

மாநஸம்’ வாசிகம்’ பாபம்’ கர்மணா ஸமுபார்ஜிதம்|
ஶ்ரீராம-ஸ்மரணேநைவ வ்யபோஹதி ந ஸம்’ஶய:||

ஶ்ரீ ராம ராம ராம

திதி$^2$ர்விஷ்ணு: ததா$^2$ வார: நக்ஷத்ரம்’ விஷ்ணுரேவ ச|
யோக$^3$ஶ்ச கரணம்’ சைவ ஸர்வம்’ விஷ்ணுமயம்’ ஜக$^3$த்||

ஶ்ரீகோ$^3$விந்த$^3$ கோ$^3$விந்த$^3$ கோ$^3$விந்த$^3$।
மமோபாத்த-ஸமஸ்த-து$^3$ரித-க்ஷய-த்$^3$வாரா ஶ்ரீபரமேஶ்வர-ப்ரீத்யர்த$^2$ம்’ ப$^4$க$^3$வத: நாராயணஸ்ய பரமேஶ்வரஸ்ய அசிந்த்யயா அபரிமிதயா ஶக்த்யா

ப்4ரியமாணஸ்ய மஹாஜலௌக4ஸ்ய மத்4யே பரிப்4ரமதாம் அநேக-கோடி-ப்3ரஹ்மாண்டா3நாம் ஏகதமே சதுர்த3ஶ-பு4வநாந்தர்க3தே பூ4-மண்ட3லே ஸப்த-த்3வீப-மத்4யே ஜம்பூ3-த்3வீபே நவ-வர்ஷ-மத்4யே பா4ரத-வர்ஷே நவ-க2ண்ட3-மத்4யே ப4ரத-க2ண்டே3 ஹிமாசல-கைலாஸ-விந்த்4யாசலாதி3-அநேக-புண்ய-ஶைல-ஶிக2ரிதே த3ண்ட3காரண்ய-விந்த்4யாரண்ய-வேதா3ரண்யாதி3-அநேக-புண்யாரண்ய-வநஶ்ரீ-பா4ஸ்வரே அஸ்மிந் பா4ரத-தே3ஶே ப்ரவஹந்தீநாம்' ப்ரியா: மாதர இவ பயஸா ப்ரஜா: புஷ்ணதீநாம்' நதீ3நாம் அந்யதமாயாம்' காவேரீ-நாம்ந்யாம்

1. கர்ணாடகேஷு கொட3கு3-இதி-க்2யாத-மலயாசல-ஸம்'ஜ்ஞக-ஸஹ்யாத்3ரி-ப்ரதே3ஶே ஸம்பூ4தாயாம்', த்3ரவிடே3ஷு ஶ்வேதாரண்ய-க்ஷேத்ர-ஸமீபே காவேரீ-பத்தநாக்2யே புண்ய-ஸ்த2லே ஸமுத்3ரம்' ப்ராப்நுவத்யாம்,

2. ஸாக்ஷாத்3 விஷ்ணு-மாயா-ரூபிண்யாம்', சதுர்முக2ஸ்ய கந்யாத்வேந ஸ்தி2தாயாம்', தத3நுக்3ரஹாத் கவேர-நாம்நோ ராஜ்ஞ: புத்ரீத்வம்' ப்ராப்தாயாம்', மநுஷ்ய-ரூபேண லோபாமுத்3ரா-நாம்நா அக3ஸ்த்ய-பத்நீத்வம்' க3தாயாம்', தீர்த2-ரூபேண தத்-கமண்ட3லு-ஸ்தி2தாயாம்',

3. ப4க3வதா நாராயணேநைவ த3க்ஷிண-க3ங்கா3த்வேந உக்த்வா,

> த்ரி-ராத்ரம்' ஜாஹ்நவீ-தீரே பஞ்ச-ராத்ரம்' து யாமுநே |
> ஸத்3ய: புநாதி காவேரீ பாபம் ஆ-மரணாந்திகம் ||

இதி ச ப்ரஶஸ்தாயாம், ப4க3வதா மஹேஶ்வரேண "அஹம்' தவ உத்பத்தி-ஸ்தா2ந-ப்ரப்ரு'4தி ஸமுத்3ர-ஸங்க3ம-பர்யந்தம் உப4யோ: கூலயோ: வத்ஸ்யாமி" இதி அநுக்ரு'3ஹீதாயாம்,

4. துலா-ஸங்க்ரமண-புண்ய-காலே ப4க3வதா க3ணேஶேந காக-ரூப-த4ரேண அக3ஸ்த்ய-கமண்ட3லோ: நிபாதிதாயாம்', ஸஹ்யாத்3ரி-க3த-நாராயணாம்'ஶ-ஆமலக-வ்ரு'க்ஷ-மூல-ஸம்பூ4தாயாம்', ப்3ரஹ்ம-கமண்ட3லு-ஸ்தி2த-ஶங்க2-நிநீத-விரஜா-தீர்த2-ஸங்க3தாயாம், ஸஹ்யாமலக-தீர்த2-ஶங்க2-தீர்த2-ஸமாக்2யா-ப்ரஸித்3தா4யாம், வேத3-கோ4ஷ-துல்ய-ஶப்3தே3ந மஹாவேகே3ந ஶிலா-வ்ரு'க்ஷாதி3-க4ர்ஷணேந ரு'ஜு-வக்ர-மண்ட3லாதி3-அநேகாகாரேண ஸமுத்3ராபி4முக2ம்' ப்ரவாஹிதாயாம்',

5. ஶிர:-ஸ்தா2ந-ஸ்தி2த-த3த்தாத்ரேயாயாம், அங்க-ஸ்தா2ந-ஶயித-ரங்க3நாதா2யாம்’, ஶ்ரீவைகுண்ட2-ரூபாந்தர-ஶ்ரீரங்க3-க்ஷேத்ர-மண்டி3தாயாம்’,

6. துலா-மாஸ-புண்யகாலே துலா-புஷ்கர-புண்யகாலே ச ஸர்வலோகக3த-ஸார்த4-த்ரிகோடி-புண்ய-தீர்த2-ஸங்க3தாயாம், அர்தோ4த3ய-மஹோத3யாதி3-காலே அதிவிஶிஷ்ட-ஸ்நாநாயாம்,

7. தூஷ்ணீம்’-ஸ்நாநேந அபி ஸப்த-ஜந்ம-பாப-விநாஶிந்யாம்’, நியம-பூர்வக-ஸ்நாநேந உப4ய-வம்’ஶ-ஸப்த-புருஷ-உத்3தா4ரண-காரிண்யாம், அநேக-நரக-யாதநா-நிவ்ரு’த்தி-ஹேது-பூ4தாயாம்’, ஸாக்ஷாத்-ஸ்நாந-அஶக்தாநாம் ஆநயநேந, ஶீதல-ஸ்நாந-அஶக்தாநாம் உஷ்ணீகரணேந அபி ஸ்நாநேந புண்ய-தா3யாம்

8. விஶ்வாமித்ர-பீ4ஷ்ம-யுதி4ஷ்டி2ர-அர்ஜுநாதி3-மஹாபுருஷை: ஸேவிதாயாம்’, வேத3ராஶி-நாமகஸ்ய தப:-ஶீலஸ்ய விப்ரஸ்ய அத்யந்த-புண்யாதிஶய-ப்ரதா3நேந ப்ரஸித்3தா4யாம், அஶ்வமேத4-யாக3ம்’ கர்தும் உத்3யுக்தாய ஹரிஶ்சந்த்3ர-மஹாராஜாய தத்3-யோக்3யதா-ஸித்3த்4யர்த2ம் நாரதே3ந அக3ஸ்த்யேந ச உபதி3ஷ்ட-ஸ்நாநாயாம்

9. ஆயுர்-ஆரோக்3ய-ப்ரதா3யாம்’, ஜப-புரஶ்சரண-வ்ரதாதி3-ஸித்3தி4-ப்ரதா3யாம்

10. தே3வாநாம் ரு’ஷீணாம்’ பித்ரூ’ணாம்’ மநுஷ்யாணாம்’ ப்ராணிநாம்’ ஸர்வ-பூ4த-வர்கா3ணாம்’ பரம-த்ரு’ப்தி-ப்ரதா3யாம்

ஏவமாதி3-ப3ஹு-கு3ண-விஶேஷண-விஶிஷ்டாயாம் அஸ்யாம்’ காவேரீ-மஹாநத்3யாம்
ஸமஸ்த-ஹரி-ஹர-தே3வதா-கு3ருசரண-ஶ்ரோத்ரிய-ஸந்நிதௌ4
ப்3ரஹ்மண: த்3விதீய-பரார்தே4 ஶ்வேதவராஹ-கல்பே ப்ரத2மே வர்ஷே ப்ரத2மே மாஸே ப்ரத2மே பக்ஷே ப்ரத2மே தி3வஸே அஹ்நி த்3விதீயே யாமே த்ரு’தீயே முஹூர்தே ஸப்தமே வைவஸ்வத-மந்வந்தரே அஷ்டாவிம்’ஶதிதமே கலியுகே3 ப்ரத2மே பாதே3 அஸ்மிந் வர்தமாநே வ்யாவஹாரிகாணாம்’ ப்ரப4வாதீ3நாம்’ ஷஷ்ட்யா: வத்ஸராணாம்’ மத்4யே ___-நாமநி வத்ஸரே த3க்ஷிணாயநே ஶரத்3-ரு’தௌ துலா-மாஸே ஶுக்ல/க்ரு’ஷ்ண-பக்ஷே ___ ஶுப4திதௌ2 ___-வாஸர-

யுக்தாயாம்' ___-நக்ஷத்ரயுக்தாயாம் ___-யோக3யுக்தாயாம்' ___-கரணயுக்தாயாம் துலா-மாஸ-புண்ய-காலே –

1. அஸ்மாகம்' ஸர்வேஷாம்' மஹாஜநாநாம்' க்ஷேம-ஸ்தை2ர்ய-வீர்ய-விஜய-ஆயு:-ஆரோக்3ய-ஐஶ்வர்யாணாம் அபி4வ்ரு'த்3த்4யர்த2ம்'

2. த4ர்ம-அர்த2-காம-மோக்ஷ-ரூபசதுர்வித4-ப2ல-புருஷார்த2ஸித்3த்4யர்த2ம், இஷ்ட-காம்யார்த2-ஸித்3த்4யர்த2ம்'

3. ஜநாநாம்' த4ர்மைக-ஶ்ரத்3தா4-ப்ரவ்ரு'த்தி-உப4ய-ஸித்3த்4யர்த2ம்' து3ராசார-நிவ்ரு'த்திபூர்வக-ஸதா3சார-ஸம்பத்த்யர்த2ம்'

4. தேந அதிவ்ரு'ஷ்டி-அநாவ்ரு'ஷ்டி-ராஹித்யேந பர்யாப்த-வ்ரு'ஷ்ட்யா வாபீ-கூபாதி3-ஜலாஶயாநாம்' ஸம்பூர்த்யர்த2ம், உபநதீ3-ஸஹிதாஸு காவேரீ-தாம்ரபர்ணீ-பிநாகிநீ-துங்க3ப4த்3ரா-க்ரு'ஷ்ணா-கோ3தா3வரீ-ப்ரப்ரு'4திஷு ஸம்யக்-ப்ரவாஹ-ஸித்3த்4யர்த2ம்'

5. ஜநாநாம்' ஜல-ஸம்பத3: ஸம்யக்3-விநியோகே3 ஶ்ரத்3தா4யா: உத3யார்த2ம்', பரிஸர-ப்ரதூ3ஷண-பரிஹாரேண ப்ரு'தி2வ்யா: தாப-ஶாந்த்யர்த2ம்'

6. தத்3த்3வாரா தே3ஶே(அ)ஸ்மிந் ஸர்வ-தா4ந்யாநாம், ஔஷதா4தி3-கு3ணயுக்தாநாம்' ஸஸ்யாநாம், சா2யா-ப2லாதி3-ப்ரதா3நாம்' வ்ரு'க்ஷாணாம்' ச ஸம்ரு'த்3த்4யர்த2ம்', க3வாதீ3நாம்' ப3ஹுக்ஷீராதி3-ப்ரத3த்வார்த2ம்

7. அநேந ஸர்வேண ஏதத்3-தே3ஶ-நிவாஸிநாம்' ஸுக2-ஶாந்த-ஜீவந-ஸித்3த்4யர்த2ம்

8. மம பா3ல்யாதி3ஷு ஜாக்ரு'3தா3தி3ஷு ச அவஸ்தா2ஸு மநோ-வாக்-காய-கர்மேந்த்3ரிய-ஜ்ஞாநேந்த்3ரிய-வ்யாபாரை: காம-க்ரோதா4தி3பி4: து3ஷ்ட-கு3ணைஶ்ச ஸம்பா4விதாநாம்' ஜ்ஞாநத: ஸக்ரு'த் க்ரு'தாநாம் அஜ்ஞாநத: அஸக்ரு'த் க்ரு'தாநாம்' ரஹஸ்யக்ரு'தாநாம்' ப்ரகாஶக்ரு'தாநாம்' வா மஹாபாதக-ஸமபாதக-உபபாதகாதீ3நாம்' ஸர்வேஷாம்' பாபாநாம்' ஸத்3ய: அபநோத3நார்த2ம்' ஶ்ருதி-ஸ்ம்ரு'தி-புராண-ப்ரதிபாதி3த-கர்மாநுஷ்டா2ந-அதி4காரஸித்3த்4யர்த2ம்' ச

அஸ்யாம்’ __ ஶுப4திதௌ2

து3ர்போ4ஜந-து3ராலாப-து3ஷ்ப்ரதிக்3ரஹ-ஸம்ப4வம் |
பாபம்’ ஹர மம க்ஷிப்ரம்’ ஸஹ்யகந்யே நமோ(அ)ஸ்து தே ||

ஸஹ்யபாதோ3த்3ப4வே தே3வி ஶ்ரீரங்கோ3த்ஸங்க3கா3மிநி |
ஶ்ரீகாவேரி நமஸ்துப்4யம்’ மம பாபம்’ வ்யபோஹய ||

இத்யாதி3நா ப்ரார்தி2தாயாம்’ ப4க3வத்யாம்’ காவேர்யாம்’ ஸ்நாநம் அந்யாநி ச யதா2ஶக்தி பூஜாதா3நாதீ3நி த4ர்மகார்யாணி கரிஷ்யே॥ (அப உபஸ்ப்ரு’ஶ்ய)

## ப்ரார்த2நா

அதிக்ரூர மஹாகாய கல்பாந்த-த3ஹநோபம |
பை4ரவாய நமஸ்துப்4யம் அநுஜ்ஞாம்’ தா3துமர்ஹஸி ||

ஸமஸ்த-ஜக3தா3தா4ர ஶங்க2சக்ர-க3தா3த4ர |
தே3ஹி தே3வ மமாநுஜ்ஞாம்’ யுஷ்மத்தீர்த2-நிஷேவணே ||

மந்த்ரங்களையோ பகவந் நாமத்தையோ மட்டும் சொல்லி மௌனத்துடன் ஸ்நானம் செய்ய வேண்டும். நதியில் ஸ்நானம் பண்ணுவோர் ப்ரவாஹத்தை பார்த்தவாறும், மற்ற இடங்களில் ஸ்நானம் பண்ணுவோர் ஸூர்யனைப் பார்த்தவாறும் செய்ய வேண்டும்.

கீழ்கண்ட ப்ரயோகங்களில் உள்ள வேத மந்த்ரங்களை அவற்றைக் கற்றவர் சொல்லவும். மற்றவர் தமக்கு இஷ்டமான பகவந் நாமத்தையோ ஸ்தோத்ரத்தையோ மந்த்ரதுலா சொல்லலாம். மந்த்ரமின்றி ஸ்நானம் செய்யக்கூடாது.

## ஸூக்தபட2நம்

வருணஸூக்தத்தை ஜபிக்க வேண்டும். தெரியாதவர்கள் புருஷஸூக்தத்தை-யாவது ஜபிக்கலாம். இது வருணனுக்கான ப்ரார்த்தனை.

## மார்ஜநம்

ஆபோ ஹி ஷ்டா2 மயோபு4வ: ...

என்னும் மந்த்ரங்களால் ஸந்த்யாவந்தனத்தில் செய்வதைப் போல் ப்ரோக்ஷித்துக் கொள்ள வேண்டும்.

# அக4மர்ஷணம்

**ஹிரண்யஶ்ரு’ங்க3ம்’ வருணம்’ ப்ரபத்3யே ...**

என்னும் மந்த்ரங்களை தெரிந்தவர்கள் ஜபிக்கவும். தெரியாதவர்கள் இங்கும் புருஷஸூக்தத்தை ஜபிக்கலாம். இங்கு 12 முறையாவது மூழ்கி ஸ்நானம் செய்ய வேண்டும்.

# ஸ்நாநாங்க3-தர்பணம்

மமோபாத்த+ப்ரீத்யர்த2ம் அத்3ய பூர்வோக்த-விஶேஷண-விஶிஷ்டாயாம் அஸ்யாம் __ ஶுப4திதௌ2 ஸ்நாநாங்க3-தே3வ-ரு’ஷி-பித்ரு’தர்பணம் அர்க்4யதா3நம்’ ச கரிஷ்யே॥

என்று ஸங்கல்பித்து ப்ரஹ்ம யஜ்ஞத்தில் உள்ளதைப் போல் ஸ்நானாங்க-தர்ப்பணத்தை செய்ய வேண்டும்.

# காவேரீ-தே3வ்யை அர்க்4யப்ரதா3நம்

மருத்3வ்ரு’தே4 மஹாபா4கே3 ஸர்வலோகைகபாவநி।
க்ரு’3ஹாணார்க்4யம்’ மயா த3த்தம்’ பாவநம்’ குரு மாம்’ ஸதா3 ॥1॥
காவேர்யை நம: - இத3மர்க்4யம் (3)॥

விஷ்ணுமாயே மஹாகாயே கவேரகுலஸம்ப4வே।
ஸஹ்யாசலஸமுத்3பூ4தே க்ரு’3ஹாணார்க்4யம்’ வரப்ரதே3 ॥2॥
காவேர்யை நம: - இத3மர்க்4யம் (3)॥

கும்ப4ஸம்ப4வகும்பா4த் த்வம்’ ஸஹ்யாமலகபூஜயா।
ஶங்கோ2த3கேந ஸஞ்ஜாதா க்ரு’3ஹாணார்க்4யம்’ ஸமுத்3ரகே3 ॥3॥
காவேர்யை நம: - இத3மர்க்4யம் (3)॥

# ப்ரார்த2நா

மருத்3வ்ரு’தே4 மஹாலக்ஷ்மீஸ்ஸஹ்யகந்யா ஸரஸ்வதீ।
அக3ஸ்த்யபத்நீ காவேரீ லோபாமுத்3ரா வரப்ரதா3 ॥1॥
கமண்ட3லுஸமுத்பந்நா ஸர்வதீர்தா2தி4தே3வதா।
விரஜா த3க்ஷிணா க3ங்கா3 ப்3ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகா ॥2॥
சதுர்வித4ப2லோத்3தா4த்ரீ சதுராநநகந்யகா।
ஸர்வாபீ4ஷ்டப்ரதா3த்ரீ ச நாம்நாம்’ ஷோட3ஶகம்’ ஸ்ம்ரு’தம்।
ஏபி4ர்நாமபதை3ர்நித்யம்’ பூஜயேத்3ப4க்திமாந்நர: ॥3॥

# தா$^3$நம்

யதாஶக்தி தக்ஷிணையை கீழ்காணும் மந்த்ரத்தைச் சொல்லி ப்ராஹ்மணாளுக்கு தானம் செய்ய வேண்டும்.

ஹிரண்யக$^3$ர்ப$^4$-க$^3$ர்ப$^4$ஸ்த$^2$ம்' ஹேமபீ$^3$ஜம்' விபா$^4$வஸோ:|
அநந்தபுண்யப$^2$லத$^3$ம் அத: ஶாந்திம்' ப்ரயச்ச$^2$ மே||

அநுஷ்டி$^2$த-துலாஸ்நாந-ஸாத்$^3$கு$^3$ண்யார்த$^2$ம்' யதோ$^2$க்த-ப$^2$லப்ராப்த்யர்த$^2$ம் இமாம்' த$^3$க்ஷிணாம்' ப்$^3$ராஹ்மணாய ஸம்ப்ரத$^3$தே$^3$। ந மம।

# யக்ஷ்ம-தர்பணம்

உடம்பில் உள்ள வியர்வை போன்ற அழுக்குகளை புண்யதீர்த்தத்தில் நாம் சேர்ப்பதால் ஏற்படக்கூடிய பாபத்தை போக்க கீழ்காணும் ஶ்லோகத்தைச் சொல்லி கரையில் ஒரு முறை இருகைகளாலும் ஜலமெடுத்து யக்ஷ்ம தேவதைக்கு தர்ப்பணம் செய்யவேண்டும்.

யந்மயா தூ$^3$ஷிதம்' தோயம்' ஶாரீரமலஸஞ்சயாத்|
தத்$^3$தோ$^3$ஷபரிஹாரார்த$^2$ம்' யக்ஷ்மாணம்' தர்பயாம்யஹம்||
யக்ஷ்மாணம்' தர்பயாமி॥

# ஸமர்பணம்

காயேந வாசா மநஸேந்த்$^3$ரியைர்வா
புத்$^3$த்$^4$யாத்மநா வா ப்ரக்ரு'தே: ஸ்வபா$^4$வாத்|
கரோமி யத்$^3$யத் ஸகலம்' பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்பயாமி||

அநேந மயா க்ரு'தேந துலாஸ்நாநேந பரமாத்மா ஸுப்ரீத: ஸுப்ரஸந்நோ வரதோ$^3$ ப$^4$வது॥

❀❀❀

# காவேரியின் சிறப்புகள்

- கர்ணாடகத்தில் ஸஹ்ய மலை என்னும் மேற்கு மலைத்தொடரின் பகுதியான கொடகு எனப்படும் மலயாசலத்தில் உருவாகி தமிழகத்தில் திருவெண்காட்டின் அருகே காவேரிப்பூம்பட்டினம் அருகே கடலை அடைபவள்.

- ஸாக்ஷாத் விஷ்ணுவின் மாயை வடிவானவள். ப்ரஹ்மாவின் பெண்ணாக இருந்தாள். அவரது அருளால் கவேரன் என்னும் அரசனுக்கு மகளாக வந்தாள். மனித வடிவம் எடுத்து லோபாமுத்ரா என்ற பெயருடன் அகஸ்த்ய முனிவருக்கு மனைவி ஆனாள். தீர்த்த வடிவமாக அவரது கமண்டலத்திலும் இருந்தாள்.

- ஶ்ரீமந் நாராயணனாலேயே "தெற்கு திசைக்கு நீயே கங்கை. கங்கைக் கரையில் மூன்று நாட்களும், யமுனைக் கரையில் ஐந்து நாட்களும், காவேரிக் கரையில் ஒரு நாளே இருந்து நீராடல் செய்தால் இறப்பது வரையிலும் அனைத்து பாபங்களும் விலகும்" என்று அருளப்பட்டவள். ஶ்ரீ பரமேஶ்வரனாலேயே "நீ உற்பத்தி ஆகும் இடத்திலிருந்து கடலை அடையும் இடம் வரை நான் உனது இரு கரைகளிலும் பல புண்ணிய தலங்களில் இடம் கொண்டு வசிப்பேன்" என்று ஆசீர்வதிக்கப்பட்டவள்.

- ஐப்பசி மாத தொடக்கத்தில் துலா ராஶியில் ஸூர்யன் ப்ரவேஶிக்கும்பொழுது பிள்ளையாரால் காக்கை வடிவம் எடுத்து அகஸ்த்யரின் கமண்டலத்திலிருந்து சாய்த்து வெளியே வரவழைக்கப்பட்டாள். ஸஹ்ய மலையில் ஶ்ரீமந் நாராயணனின் அம்ஶமான ஒரு நெல்லி மரத்து அடியில் ஓடத் தொடங்கினாள். அப்பொழுது ப்ரஹ்மா தமது கமண்டலுவில் இருந்த விரஜா தீர்த்தம் என்பதைத் தமது சங்கத்தால் அங்கு அபிஷேகம் செய்விக்க அதுவும் கலவப் பெற்றாள். ஆகவே ஸஹ்ய ஆமலக தீர்த்தம் என்றும் சங்க தீர்த்தம் என்றும் பெயர் பெற்றாள். வேத கோஷம் போன்ற கர்ஜனையுடனும் மிகுந்த வேகத்துடனும் கற்களையும் மரங்களையும் அடித்துக்கொண்டு நேராகவும் வளைவாகவும் வட்டமிட்டும் பலவிதமாக சமுத்திரம் நோக்கிச் சென்றாள்.

- இவளது உத்பத்தி ஸ்தானத்தில் தத்தாத்ரேய மஹர்ஷி நிற்கிறார். மடியில் ரங்கநாதர் படுத்திருக்கிறார். ஶ்ரீ வைகுண்டத்தின் மற்றொரு வடிவான ஶ்ரீரங்க க்ஷேத்ரம் இவள்கண் உள்ளது.

- வருடா வருடம் ஸூர்யன் துலா ராஶிக்கு வரும் துலா மாஸ புண்ய காலத்திலும், பன்னிரு வருடத்திற்கு ஒரு முறை ப்ருஹஸ்பதி துலா

ராஶிக்கு வரும் துலா புஷ்கர புண்ணிய காலத்திலும் உலகனைத்தும் உள்ள மூன்றரை கோடி புண்ணிய தீர்த்தங்கள் இவளிடம் வந்து ஐக்கியம் ஆகின்றன. அர்த்தோதயம் மஹோதயம் முதலிய புண்ணிய காலங்களிலும் இவளிடம் நீராடுவது மிகுந்த சிறப்பாகும்.

- வெறுமனே நீராடினாலும் ஏழு ஜன்மங்களின் பாபங்களைப் போக்கவல்லவள். ஶாஸ்த்ரப்படி நீராடினாலோ தாய் தந்தையர் இரு வழியிலும் ஏழு குலங்களை உய்விக்க வல்லவள். அநேக நரக வேதனைகளை நீக்கக்கூடியவள். நேரடியாக வந்து குளிக்க இயலாதவர்களுக்கு எடுத்துச் சென்று நீராடினாலும், குளிர்ந்த நிலையில் இயலாவிடில் சுட வைத்து நீராடினாலும் புண்ணியத்தைக் கொடுப்பவள்.

- விஶ்வாமித்ரர், பீஷ்மர், யுதிஷ்டிரர், அர்ஜுனன் முதலிய மஹாபுருஷர்களால் வணங்கப்பட்டவள். வேதராஶி என்னும் தவசீலருக்கு மிகுந்த உயர்ந்த கதியை அளித்ததாக புராணத்தில் சொல்லப்பட்டவள். அச்வமேத யாகம் செய்ய முனைந்த ஹரிஶ்சந்த்ர மஹாராஜாவுக்கு அதற்கு தகுதி கிடைக்கும்பொருட்டு இவளிடம் நீராடு என்று நாரதராலும் அகஸ்த்யராலும் கூறப்பெற்றவள்.

- உலக ரீதியில் ஆயுள், ஆரோக்யம் இவற்றை அளிப்பவள். ஆன்மீக ரீதியில் ஜபம், புரஶ்சரணம், வ்ரதம் முதலியவற்றின் ஸித்தியைக் கொடுப்பவள்.

- தேவர்கள், ருஷிகள், பிதிரர்கள் (முன்னோர்கள்), மனுஷ்யர், பிராணிகள் ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் மிகுந்த திருப்தியை அளிப்பவள்.